IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.45/2026

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SOORABATHUMAN |
| FATHER'S NAME | : | GANESAN |
| VILLAGE | : | KATAPDI |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 4th day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்ட காட்பாடி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2024 ம் தேதி காலை 07.00 மணி க்கு நானும், தலைமை காவலர் புகழேந்தி மற்றும் காவலர் வினோத் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் ஔவை தெரு வழியாக கண்காணித்து சென்ற போது அந்த இடத்தில் முட்புதரில் அங்கு வந்த நபர்களிடம் ஏதே விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரை பரிசோதனை செய்த போது அவரிடம் டைமண்ட XXX RUM 180 மிலி அளவு கொண்ட 30 பாட்டில்கள் இருந்ததது. அதை கைப்பற்றி அவரை விசாரித்தபோது எதிரி விற்பனை நோக்கத்திற்காக எடுத்து செல்வதாக கூறினார். பின்னர் எதிரியை கைது செய்து எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் புகழேந்தி, வினோத் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் டைமண்ட XXX RUM 180 மிலி அளவு கொண்ட 30 பாட்டில்கள் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரி மீத நிலைய குற்ற எண் 472/2024, சட்டபிரிவுகள் 4(1)(a),4(1)(c) TNP AMENDMENT ACT 2024 ன் படி பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்குட்டுத்தினேன். வழக்கு சொத்து காவல்நிலையத்தில் இருந்த போது சேதம் அடைந்து விட்டாதல் படிவம் 91 மூலமாக நீதிமன்றம் அனுப்ப இயலவில்லை.

அதற்காக தனி அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது 28.05.2025 ம் தேதி 4(1)(a),4(1)(c) TNP AMENDMENT ACT 2024 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கின் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3 ல் ஜிடியில் என்ற இடத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் டைமண்ட XXX RUM 180 மிலி அளவு கொண்ட 30 பாட்டில்கள் கைப்பற்றினோம். பையை வழக்கு சொத்தாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுத்து நீதிமன்றம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடம் பொதுமக்கள் அதிகமாக இருப்பார்கள் என்றால் 2,3 பேர் இருப்பார்கள். அந்த 2,3 நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தனி அறிக்கைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றபட்ட வழக்கு சொத்து ரசயாண பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். உரிய சட்டநடவடிக்கை பின்பற்றமால் எதிரி மீது வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. தனிநபர் யாரையும் சாட்சியாக சேர்க்கமால் எனக்கு கீழ் பணிபுரியும் நபர்களை வைத்து பொய்யாக வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரம், தேதியில் சம்பவம் நடக்கவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

சம்பவ இடத்திலே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து காவல்நிலையத்தில் பிரிண்ட் எடுத்தோம் என்றால் சரிதான்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 04.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.